**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 157 of 2024

DATE : 03.10.2025

Depositions of witness for Prosecution

PW: 1

| Name | கல்யாண குமார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | கருப்பையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of October 2025

**(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு திலீபன் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் ஆத்தங்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக கடை வைத்து தொழில் வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 01.01.2023 அன்று காலை 08.30 மணி அளவில் நான் கடையில் வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது வழக்கின் எதிரிகள் எனது கடைக்கு வந்தார்கள். அங்கே வந்து சவுக்கு மரத்தை வெட்டுமாறு என்னிடம் பிரச்சனை செய்தார்கள். அதற்கு நான் சவுக்கு மரம் என்னுடைய இடத்தில் தான் உள்ளது என்றும் அதை நான் ஏன் வெட்ட வேண்டும் என்றும் கேட்டேன். என்னை கடையை விட்டு வெளியே வருமாறு இழுத்து எதிரி கருப்பசாமி கையில் வைத்திருந்த கம்பியால் எனது தலையில் தாக்கி விட்டார். எதிரி பூரணம் கையில் வைத்திருந்த கட்டையால் என்னை தாக்கினார். எதிரி தங்கப்பாண்டி கம்பியால் எனது இடது கண்ணோடு சேர்த்து தாக்கிவிட்டார். எதிரி சின்ன கருப்பசாமியும், எதிரி கல்பனாவும் கல்லை கொண்டு என்னை எறிந்து காயப்படுத்தினார்கள். அப்போது சம்பவ இடத்தில் இருந்த வெள்ளைச்சாமியும்,

ராஜ்குமாரும் எதிரிகளை சத்தம் போட்டு போக சொன்னார். எதிரி கருப்பசாமி எனது கடையில் இருந்த ரூபாய் 7500 ரொக்கத்தை எடுத்து சென்று விட்டார். கடையில் இருந்த பொருள்களையும் சேதப்படுத்திவிட்டு சென்றார். எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது.

அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி எண்ணெய் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது தகவல் அறிந்து வந்த காவலர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் இருந்து என்னை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விருதுநகர் அரசு மருத்துவமனையில் 7 நாட்கள் நான் சிகிச்சை பெற்றேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தனியார் மருத்துவமனையிலும் நான் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு